# FIRST INFORMATION REPORT
# முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(குற்ற வியல் நடைமுறைச் சட்டம் 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109166

1. District / மாவட்டம் திருவாரூர் PS / காவல்நிலையம் V&AC திருவாரூர் Year / ஆண்டு 2023 FIR No / மு.த.அ. எண் 1/23 Date / நாள் 16/3/23

2. (i) Act சட்டம் Cr.P.C. Sections பிரிவுகள் 102
(ii) Act சட்டம் Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள் 7, 7A, 8 and r/w 12
(iii) Act சட்டம் as amended in 2018 Sections பிரிவுகள்
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள் Date from / நாள் முதல் 15/3/23 Date to / நாள் வரை 16/3/23
Time Period / நேர அளவு Time from / நேரம் முதல் 15.30 hrs Time to / நேரம் வரை 00.30 hrs
(b) Information Received at PS Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16/3/23 Time / நேரம் 07.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16/3/23 Time / நேரம் 07.30 hrs

4. Type of Information : Written/ Oral : / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 3 Km East
Beat Number : / முறைக் காவல் எண்
(b) Address : / முகவரி TNCSC [illegible]

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : / குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. ஜெகதீசன்
(b) Father's/ Husband's Name : / தந்தை / கணவர் பெயர் A. ரெங்கநாதன்
(c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு 19-10-73
(d) Nationality / நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : / வழங்கப்பட்ட நாள்
Place of Issue : / வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : / தொழில்
(g) Address : / முகவரி மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம் [illegible], திருவாரூர். [illegible]

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப்படுகிறது:

இன்று 16.03.2023-ந்தேதி 07.30 மணியளவில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, ஆய்வாளர் திரு.R.அருண்பிரசாத் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திரு.R.ஜெகதீசன், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், தஞ்சாவூர் என்பவர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் F.ஜெகதீசன், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருவாரூர் மாவட்டம், இருப்பு தஞ்சாவூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா, 15.03.2023-ம் தேதி தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிபக் கழக கிடங்கு தொகுப்பு வளாகத்தில் அமைந்துள்ள அலுவலகங்களில் கொள்முதல் பணியாளர்கள் மற்றும் அரிசி ஒப்படைக்க வரும் லாரி ஓட்டுநர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட அரவை மில் முகவர்களிடமும் கையூட்டு கேட்டு பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில் தஞ்சாவூர்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed ............ Rank ............ to take up the Investigation / Refused Investigation / transferred to PS ............ on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............ பதவி ............ நிலை பணியாளரின், புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

16/3/23

Name பெயர் ............
Rank நிலை ............ No எண் ............

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

ஆய்வு குழு ஆய்வாளர் ஆகிய நான் மற்றும் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் 15.30 மணி முதல் 16.03.2023ஆம் தேதி 00.30 மணி வரை திருவாரூர் தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிபக் கழக கிடங்கு தொகுப்பு வளாகத்தில் அமைந்துள்ள 1) துணை மேலாளர், கொள்முதல் மற்றும் இயக்ககம் அலுவலகம், 2) துணை மேலாளர், தரக்கட்டுப்பாடு, கிடங்கு தொகுப்பு அலுவலகம் 3) திருவாரூர் வட்டக்கிடங்கு அலுவலகம் 4) கூத்தாநல்லூர் தாலுக்கா @ மூலங்குடி வட்டக்கிடங்கு அலுவலகம், திருவாரூர் மற்றும் 5) சாக்கு குடோன் அலுவலகம் ஆகியவற்றில் திடீர்சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனை தொடர்பாக தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் துணை மேலாளர், கொள்முதல் மற்றும் இயக்ககம் அலுவலகத்தில் கண்டறியப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.29,760/-ம், துணை மேலாளர், தரக்கட்டுப்பாடு, கிடங்கு தொகுப்பு அலவலகத்திலிருந்து கண்டறியப்பட்ட ரூ.89,990/-ம், திருவாரூர் வட்டக்கிடங்கு அலுவலகத்திலிருந்து கண்டறியப்பட்ட ரூ.24,846/-ம் மற்றும் கூத்தாநல்லூர் தாலுக்கா @ மூலங்குடி வட்டக்கிடங்கு அலுவலகத்திலிருந்து கண்டறியப்பட்ட ரூ.9,220/-ம் ஆக மொத்தம் கூடுதல் ரூ.1,53,816/- கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து தரக்கட்டுப்பாட்டு அலுவலகத்திலிருந்த ஆவணங்கள் 1) TNCSC கேட் பாஸ்புக் - புத்தக எண்.106, (005251 -005300), 2) TNCSC PO Puschase and Payment Register From 12.01.2023, 3) TNCSC Sample Analysis Register from 12.02.2023, 4) TNCSC Attendance Register – தரக்கட்டுப்பாட்டு, துணை மேலாளர் அலுவலகம், 5) TNCSC Sample Pre – Analysis and Bulking Register 6) கிடங்கு தொகுப்பு லாரி அனுமதி பதிவேடு, துணை மேலாளர் கொள்முதல் மற்றும் `இயக்ககம் அலுவலகத்திலிருந்த ஆவணங்கள் 7) TNCSC- Attendance Register – Unit Office கொள்முதல் மற்றும் இயக்ககம் 8) படை வீரர் கொடிநாள் 2022 நிதி ரசீது (21 தொகுப்பு), திருவாரூர் தாலுக்கா கிடங்கு அலுவலகத்திலிருந்த ஆவணங்கள் 9) திருவாரூர் வட்டக்கிடங்கு Attendance Register, 10) திருவாரூர் வட்டக்கிடங்கு கேட் பாஸ்புக் - புத்தக எண்.449, (020901 - 020950), 11) திருவாரூர் வட்டக்கிடங்கு - Sample Pre – Analysis and Bulking Register, 12) Stack Card Register, கூத்தாநல்லூர் தாலுக்கா @ மூலங்குடி வட்டக்கிடங்கு அலுவலகத்திலிருந்த ஆவணங்கள் 13) மூலங்குடி வட்டக்கிடங்கு Attendance Register, 14) மூலங்குடி வட்டக்கிடங்கு - Sample Pre – Analysis and Bulking Register சாக்கு குடோன் அலுவலகத்திலிருந்த ஆவணங்கள் 15) சாக்கு குடோன் கேட் பாஸ்புக் - புத்தக எண்.79, (003901 - 003950), 16) உள் மண்டல அனுப்புகை படிவ புத்தகம், 17) Issue Memo Book No.169 (008401 – 008450), 18) Stock Issue Register No.12 (000551 – 000600), 19) Stack Card Register, 20) Godown Stock Register ஆகியவற்றை கைப்பற்றி இத்துடன் ஆஜர்படுத்துகிறேன். எனவே கொள்முதல் பணியாளர்கள் மற்றும் அரிசி ஒப்படைக்க வரும் லாரி ஓட்டுநர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட

அரவை மில் கணக்காளர்களிடமும் ரூ.1,53,816/- வசூல் செய்து குற்றமுறு நடவடிக்கையில் ஈடுபட்ட 1) திரு.பெரியசாமி, த/பெ முத்து, உதவியாளர், 2) திரு.தேவநேசன், த/பெ சின்னையன், தரகட்டுபாட்டு ஆய்வாளர், 3) திரு.செல்வகணபதி, த/பெ சுந்தரமூர்த்தி, எடையாளர், 4) கணேஷ்குமார், த/பெ ரெங்கசாமி, வாட்ச்மேன், 5) திரு.கதிரவன், த/பெ ரவி, தற்காலிக பணியாளர், 6) திரு.பாஸ்கரன், த/பெ பக்தன், மேலாளர், 7) திரு.சுப்பிரமணியன், த/பெ ராமசாமி, இளநிலை உதவியாளர், 8) திரு.பாலசுப்பிரமணியன், த/பெ பழனியாண்டி, தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர், 9) திரு.துரை, த/பெ பொன்னுசாமி, உதவி மேலாளர், தரக்கட்டுபாடு, மண்டல மேலாளர் அலுவலகம், திருவாரூர், 10) திரு.மணிகான், த/பெ சதாசிவம், TCCWS (தமிழ்நாடு கூட்டுறவு பண்டகசாலை), 11) திரு.தமிழ்ச்செல்வன், த/பெ தங்கராசு, நன்னிலம், திருவாரூர், (தனி நபர்) 12) திரு.சுந்தரமூர்த்தி, த/பெ சுப்பிரமணியன், மாங்குடி(தனி நபர்) 13) திரு.குணசேகரன், த/பெ ராமு, அகரதிருநல்லூர் (தனி நபர்) 14) திரு.அய்யப்பன், த/பெ கோவிந்தசாமி, கணக்குபிள்ளை, SM & Sons, மாடர்ன் ரைஸ் மில், (தனி நபர்) மீது வழக்கு பதிவுசெய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் ***** (R.ஜெகதீசன்) மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருவாரூர் மாவட்டம், இருப்பு தஞ்சாவூர். Sir, Received the complaint & registered a case in Thiruvarur V&AC Crime No.1/23 u/s 102 Cr.P.C and 7, A, 8 r/w 12 of PC Act 1988 as amended in 2018 on 16/3/2023 at 7.30 AM Sd (xxxxxxxxxxx) R.அருண்பிரசாத், Inspector of Police, V&AC, Thiruvarur திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் இன்று 15.03.2023-ந் தேதி திருவாரூர், தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிபக் கழக கிடங்கு தொகுப்பு வளாகத்தில் அமைந்துள்ள அலுவலகங்களில் கொள்முதல் பணியாளர்கள் மற்றும் அரிசி ஒப்படைக்க வரும் லாரி ஓட்டுநர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட அரவை மில் கணக்காளர்களிடமும் கையூட்டு கேட்டு பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில் தஞ்சாவூர் ஆய்வு குழு ஆய்வாளர் திரு.R.ஜெகதீசன் ஆகிய நான் மற்றும் திருவாரூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரியும் திரு.வை.திவாகர் என்பவருடன் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவகத்திற்கு சென்றும், மேற்படி தகவலை தெரிவித்தும், அதன் பொருட்டு மேற்படி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்வதற்காக திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து இன்று 15.03.2023-ந் தேதி மாலை 03.00 மணியளவில் புறப்பட்டும், திருவாரூர், தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழக, கிடங்கு தொகுப்பு வளாகத்திற்கு மாலை 03.30 மணியளவில் வந்தும், மேற்கொண்ட திடீர்சோதனை நடவடிக்கை விவரம். இந்த திடீர் சோதனை குழுவில் இருந்த அலுவலர்கள் விவரம்: 1. திரு.ஜெகதீசன், ஆய்வு குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர் 2. திரு.திவாகர், த/பெ வைத்தியலிங்கம், முதுநிலை வருவாய் ஆய்வாளர், வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், திருவாரூர் 3. திரு.R.அருண்பிரசாத், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு

பிரிவு, திருவாரூர். மேற்படி திடீர் சோதனையின் போது திருவாரூர், தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழக கிடங்கு தொகுப்பில் இருந்த 1) துணை மேலாளர், கொள்முதல் மற்றும் இயக்கம் அலுவலகம், 2) துணை மேலாளர், தரக்கட்டுப்பாட்டு அலுவலகம், 3) திருவாரூர் தாலுக்கா கிடங்கு அலுவலகம், 4) கூத்தாநல்லூர் தாலுக்கா @ மூலங்குடி வட்ட கிடங்கு அலுவலகம் மற்றும் 5) சாக்கு குடோன் ஆகிய அலுவலகங்களில் ஆஜரில் இருந்த அலுவலர்களின் விவரம். 1) துணை மேலாளர் அலுவலகம் கொள்முதல் மற்றும் இயக்ககம் (Unit Office) 1. திரு.T.இராஜேந்திரன், த/பெ திருமேணி, துணை மேலாளர், கொள்முதல் மற்றும் இயக்கம், தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 2. திரு.பெரியசாமி, த/பெ முத்து, உதவியாளர், துணை மேலாளர் அலுவலகம், கொள்முதல் மற்றும் இயக்கம், தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர்3. திரு.ரமேஷ் , த/பெ பக்கிரிசாமி, கண்காணிப்பாளர், துணை மேலாளர் அலுவலகம், கொள்முதல் மற்றும் இயக்கம், தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 4.திரு.S.ராமமூர்த்தி, த/பெ சீனிவாசன், கண்காணிப்பாளர், துணை மேலாளர் அலுவலகம், கொள்முதல் மற்றும் இயக்கம், தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 5.செல்வி.பார்கவி, த/பெ வீரமணி, இளநிலை பொறியாளர், துணை மேலாளர் அலுவலகம், கொள்முதல் மற்றும் இயக்கம், தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 6. திரு.சேதுராசன், த/பெ கலியபெருமாள், தட்டச்சர், துணை மேலாளர் அலுவலகம், கொள்முதல் மற்றும் இயக்கம், தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 7. திரு.P.பாலசந்தர், த/பெ பரந்தாமன், பில் கிளர்க், துணை மேலாளர் அலுவலகம், கொள்முதல் மற்றும் இயக்கம், தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 8.செல்வி.சாலினிதேவி, த/பெ முருகையன், பில் கிளர்க் (Record Clerk) , துணை மேலாளர் அலுவலகம், கொள்முதல் மற்றும் இயக்கம், தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர்.2) துணை மேலாளர், தரக்கட்டுப்பாடு அலுவலகம் (கிடங்கு தொகுப்பு ) 9.திரு.தேவநேசன், த/பெ சின்னையன், தரகட்டுப்பாட்டு ஆய்வாளர், துணை மேலாளர்- தரகட்டுப்பாடு அலுவலகம், கிடங்குதொகுப்பு, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 10. திரு.இளங்கோவன், த/பெ தாதன், உதவி பொறியாளர், மாடர்ன் ரைஸ்மில், தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 11. திரு.பாண்டியன், த/பெ வீராச்சாமி, உதவியாளர், துணை மேலாளர்- தரகட்டுப்பாடு அலுவலகம், கிடங்குதொகுப்பு,தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். ·12. திரு.செல்வகணபதி, த/பெ சுந்தரமூர்த்தி, எடையாளர், துணை மேலாளர்- தரகட்டுப்பாடு அலுவலகம், கிடங்குதொகுப்பு, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 13. திரு.கணேஷ்குமார், த/பெ ரெங்கசாமி, வாட்சு மேன், துணை மேலாளர்- தரகட்டுப்பாடு அலுவலகம், கிடங்குதொகுப்பு, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 14.திரு.கதிரவன், த/பெ ரவி, தற்காலிக பணியாளர், துணை மேலாளர்- தரகட்டுப்பாடு அலுவலகம், கிடங்குதொகுப்பு, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 15. திரு.அருண்தாஸ், த/பெ

பன்னீர்செல்வம், தற்காலிக பணியாளர், வன்மீகபுரம், திருவாரூர். 16. திரு.சரவணன், த/பெ பாலமுருகன், மேட்டார் எண்ட்ரி ஆப்ரேட்டர், 1/27 செல்வபுரம், திருவாரூர். 17. திரு.தமிழ்ச்செல்வன், த/பெ தங்கராசு, காளியம்மன் கோயில் தெரு, பூந்தோட்டம், நன்னிலம், திருவாரூர். 18. திரு.சுந்தரவேல், த/பெ நரேந்திரன், வீரபோகம், விற்குடி, சங்கரைத்தேத், திருவாரூர். 19. திரு.சங்கர், த/பெ ராமச்சந்திரன், கணக்குபிள்ளை, MRM Rice Mill, திருவாரூர். 20. திரு.சுந்தரமூர்த்தி, த/பெ சுப்பிரமணியன், 246 தென்கரை, கீழமணலி, மாங்குடி, திருவாரூர். 21. திரு.சோமு, த/பெ சண்முகம், லாரி ஓட்டுனர், விஷ்ணுதோப்பு, புலிவலம், திருவாரூர். 22. திரு.குணசேகரன், த/பெ ராமு, 1/28, மாரியம்மன் கோயில் தெரு, அகரதிருநல்லூர், காட்டூர், திருவாரூர். 3) வட்டக்கிடங்கு திருவாரூர் 23. திரு.ரவி, த/பெ கைலாசம், உதவி தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர், திருவாரூர் தாலுக்கா கிடங்கு, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 24. திரு.பாஸ்கரன், த/பெ பக்தன், மேலாளர், தரகட்டுப்பாடு, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், விளமல், திருவாரூர். 25. திரு.S.ரவி, த/பெ சிவராமன், இளநிலை உதவியாளர், திருவாரூர் தாலுக்கா கிடங்கு, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 26. திரு.விஸ்வநாதன், த/பெ சுப்பிரமணியன், பில் கிளர்க், திருவாரூர் தாலுக்கா கிடங்கு, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 27. திரு.சுப்பிரமணியன், த/பெ ராமசாமி, இளநிலை உதவியாளர், திருவாரூர் தாலுக்கா கிடங்கு, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 28. திரு.குருமூர்த்தி, த/பெ ராமமூர்த்தி, வாட்சுமேன், குடோன் காம்ப்ளக்ஸ், தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 29. திருமதி.சரஸ்வதி, த/பெ பாண்டியராஜன், எடையாளர், திருவாரூர் தாலுக்கா கிடங்கு, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 30. திருமதி.ராஜலெட்சுமி, த/பெ சக்திவேல், துப்புரவு பணியாளர், திருவாரூர் தாலுக்கா கிடங்கு, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 31. திரு.சண்முகம், த/பெ ஜெயராமன், இளநிலை உதவியாளர், வட்டக்கிடங்கு, மூலங்குடி, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 32. திரு.நீலமேகம், த/பெ அஞ்சையன், எடையாளர், திருவாரூர் தாலுக்கா கிடங்கு, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 33. திரு.சிவானந்தம், த/பெ சண்முகம், தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர், கிடங்கு தொகுப்பு,தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர். 34. பாலசுப்பிரமணியன், த/பெ பழனியாண்டி, தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர், குடவாசல் மற்றும் கிடாரங்கொண்டான், திருவாரூர். 35. திரு.சித்தார்த்தன், த/பெ அம்பிகாபதி, உதவி தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர், ஆலங்குடி, திருவாரூர். 36. திரு.துரை, த/பெ பொன்னுசாமி, உதவி மேலாளர், தரக்கட்டுபாடு, மண்டல மேலாளர் அலுவலகம், திருவாரூர். 37. திரு.வேதரத்தினம், த/பெ சுப்பிரமணியன், உதவியாளர், கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, திருவாரூர். 4) வட்டக்கிடங்கு- கூத்தாநல்லூர் தாலுக்கா @ மூலங்குடி அலுவலகம்38.திரு.சிவக்குமார், வேதையன், இளநிலை தரகட்டுப்பாட்டு ஆய்வாளர், வட்டக்கிடங்கு, மூலங்குடி, திருவாரூர். 39. திரு.பரணிதரன், த/பெ சதாசிவம், TCCWS

(தமிழ்நாடு கூட்டுறவு பண்டகசாலை), காகிதகாரதெரு, திருவாரூர். 40. செல்வி.துர்கா, த/பெ ராஜ், டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர், தற்காலிகம், வட்டக்கிடங்கு, மூலங்குடி, திருவாரூர். 41. திரு.அய்யப்பன், த/பெ கோவிந்தசாமி, கணக்குபிள்ளை, SM & Sons, மாடர்ன் ரைஸ் மில், வண்டாம்பாளை, திருவாரூர். 42. திரு.கல்யாணசுந்தரம், த/பெ சௌரிராஜன், கணக்குபிள்ளை, SVT Rice Mill, நாலுகால் மண்டபம், திருவாரூர். 5) சாக்கு கிடங்கு – திருவாரூர்43. மதியழகன், த/பெ அய்யாறு, பட்டியல் எழுத்தர், சாக்கு கிடங்கு, திருவாரூர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், திருவாரூர், மேற்படி வளாகத்திற்கு திடீர் சோதனைக்காக இன்று 15.03.2023 மாலை 03.30 மணியளவில் வந்த போது மேற்படி அலுவலக வளாகத்தின் நுழைவாயிலில் பாதுகாவலர் திரு.ராஜ்குமார் என்பவர் பணியில் இருந்தார். அவரிடம் திடீர் சோதனை குழுவினரை அறிமுகம் செய்து கொண்டு மேற்படி அலுவலகத்தை திடீர் சோதனை மேற்கொள்ள வந்த விபரம் தெரிவிக்கப்பட்டு வடக்கு பார்த்து அமைந்திருந்த அலுவலகத்தின் உள்ளே சென்று சோதனை ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி துணை மேலாளர், கொள்முதல் மற்றும் இயக்குதல் (Unit Office) அலுவலகமானது தரை தளம் மற்றும் இரண்டு மேல் தளங்களுடன் வடக்கு திசையை பார்த்த வாசல் கொண்டு அமைந்துள்ளது. அதன் தரை தளம் மற்றும் இரண்டாம் தளங்கள் ஆவணங்கள் வைப்பறையாகவும், முதல் தளம் அலுவலகமாகவும் இருந்தது. அதில் துணை மேலாளர் அலுவலகமும், அத்துடன் இணைந்தவாறு அலுவலக பணியாளர்கள் அமந்திருந்த அலுவலகமும் அமைந்திருந்தது. இந்த அலுவலகத்தின் மேற்கே துணை மேலாளர், கிடங்கு தொகுப்பு தரக்கட்டுப்பாட்டு அலுவலகமும், அதற்கும் மேற்கே தாலுக்கா குடோன் கட்டிட அலுவலகமும் அமைந்துள்ளது. மேற்படி அலுவலகங்களின் பின்புறம் முழுவதுமான கிடங்குகளும், நெல் மற்றும் அரிசி கிடங்குகள் அமைந்துள்ளது. அந்த கிடங்குகளில் சாக்கு குடோனும், மூலங்குடி வட்ட கிடங்கும் மற்ற கிடங்குகளில் நெல் மற்றும் அரிசி மூட்டைகள் அடுக்கப்பட்டும் உள்ளது. மேற்குறிப்பிட்ட திருவாரூர் தாலுக்கா மற்றும் மூலங்குடி வட்ட கிடங்குகளில் அங்கன்வாடி மையங்களுக்கு அனுப்பிவைக்கப்படும், ஆயில் பருப்பு, சீனி, கோதுமை மற்றும் இதர பொருட்கள் காணப்பட்டது. துணை மேலாளர் கொள்முதல் மற்றும் இயக்ககம் அலுவலகத்தினை ஆய்வு குழு அலுவலர் திரு.ஜெகதீசன் மற்றும் விஜிலென்சு குழுவினருடன் மாலை 03.45 மணி முதல் 05.45 மணிவரை சோதனை செய்ததில் அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த அனைத்து பிரிவுகளிலும் இருந்த அலுவலர்களை அங்கேயே அமர வைக்கப்பட்டது. துணை மேலாளர் திரு.இராஜேந்திரன் மற்றும் பணியாளர்களிடம் திடீர் சோதனை குழுவினரை அறிமுகம் செய்து கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் ஆஜரில் இருந்த துணை மேலாளர் மற்றும் பணியாளர்களையும் அலுவலகத்தையும் தனித்தனியாக சோதனை செய்யப்பட்டதில் கீழ்கண்ட விபரங்கள் கண்டறியப்பட்டது. அதில் திரு.பெரியசாமி, உதவியாளர் என்பரிடம் சோதனை செய்ததில் ரூ.2510/- காணப்பட்டது. அந்த பணம் குறித்து அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த பணம் கையூட்டாக பெற்று வைத்திருந்த பணம் என்று கருதி மகஜரில் கைப்பற்றப்பட்டது. திரு.இராஜேந்திரன், துணை மேலாளரை

சோதனை செய்தபோது ரூ.7,200/- அவரிடம் இருந்தது. அது குறித்து அவரிடம் விசாரணை செய்ய, 15.03.2023 அன்று தனது SBI ATM-ல் இருந்து ரூ.9,000/- எடுத்ததாகவும், செலவு போக மீதமிருந்த தொகை என ATM-ஐ காண்பித்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.ரமேஷ், கண்காணிப்பாளரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து ரூ.3740/- இருந்தது. அது குறித்து விசாரிக்க அவர் தனது மருத்துவ செலவிற்காக வைத்திருந்ததாக கூறியதால் அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. திரு.S.ராமமூர்த்தி, கண்காணிப்பாளரை சோதனை செய்ய, ரூ.135/- அவரிடம் இருந்தது. இது குறித்து விசாரிக்க அவர் தனது சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. செல்வி. பார்கவி, இளநிலை பொறியாளரை சோதனை செய்ய அவரிடம் ரூ.700/- இருந்தது. அது குறித்து அவரிடம் விசாரிக்க அவர் தனது சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.பாலசுந்தரம், பில் கிளர்க் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.1000/- இருந்தது. அது குறித்து விசாரிக்க அவர் தனது சொந்த பணம் என்று தெரிவித்தால் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. செல்வி.சாலினிதேவி, பில்கிளர்க் என்பவரை சோதனை செய்ய, அவரிடம் ரூ.1600/- இருந்தது. அது குறித்து விசாரிக்க அவர் தனது சொந்த பணம் என்று தெரிவித்தால் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்படி அலுவலகத்தில் இருந்த இரும்பு லாக்கரை சோதனை செய்தபோது அதில் ரூ.1,400/- மற்றும் ரூ.27,250/- காணப்பட்டது. அது குறித்து அந்த லாக்கரை பயன்படுத்தி வரும் உதவியாளர் திரு.பெரியசாமி மற்றும் துணை மேலாளர் திரு.இராஜேந்திரன், கண்காணிப்பாளர் திரு.ரமேஷ் ஆகியோரிடம் விசாரணை செய்யததில் அதில் இருந்த ரூ.1,400/- அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள பிள்ளையார் கோயில் தொடர்பான பணம் என்று தெரிவித்ததால் அந்த பணம் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் ரூ.27,250/- கொடிநாள் பணம் என்று தெரிவித்தார்கள். அதுகுறித்து ஆவணங்களை கேட்டபோது, கொடிநாள் பணம் வசூல் குறித்து தனியாக பதிவேடு ஏதும் பின்பற்றப்படவில்லை என்று தெரிவித்து PO Purchase and Payment Register-ல் பின்பக்கத்தில் 190 முதல் 193 வரையிலான பக்கங்களில் Procuring Officer சிலரது பெயர்களை குறிப்பிட்டு கொடிநாள் பில்லில் உள்ள எண்கள் குறிக்கப்பட்டு தொகை குறிப்பிடப்பட்டிருந்தது. அது குறித்த பில் அடிக்கட்டையை பார்த்தபோது அதில் பெயர், விபரம் ஏதும் குறிக்கப்படாமல் இருந்தது. அது குறித்து துணை மேலாளர் திரு.இராஜேந்திரன், உதவியாளர் பெரியசாமி, கண்காணிப்பாளர் திரு.ரமேஷ் ஆகியோரிடம் விசாரிக்க அவர்கள் எவ்வித விளக்கமும் தெரிவிக்காததால் மேற்படி பணம் ரூ.27,250/- சந்தேகத்திற்குரியதாக கருதி மேற்கண்ட தொகை கைப்பற்றப்பட்டது. துணை மேலாளர் கொள்முதல் மற்றும் இயக்கக அலுவலகத்தில் இருந்தவர்களிடம் கைப்பற்றப்பட்ட மற்றும் திரும்ப ஒப்படைக்கப்பட்ட தொகைகள் விபரம்.

| வ. எண். | அலுவலரின் பெயர் மற்றும் பதவி | சோதனையின் போது | கைப்பற்றப்பட்ட தொகை | விசாரணைக்குபின் திருப்பி |
|---|---|---|---|---|

| | | கண்டுபிடிக்கப்பட்ட தொகை | | கொடுக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு.T.இராஜேந்திரன், த/பெ திருமேணி, துணை மேலாளர், | 7200 | -- | 7200 |
| 2. | திரு.பெரியசாமி, த/பெ முத்து, உதவியாளர், | 2510 | 2510 | -- |
| 3. | திரு.ரமேஷ், த/பெ பக்கிரிசாமி, கண்காணிப்பாளர், | 3740 | - | 3740 |
| 4. | திரு.S.ராமமூர்த்தி, த/பெ சீனிவாசன், கண்காணிப்பாளர், | 135 | -- | 135 |
| 5. | செல்வி.பார்கவி, த/பெ வீரமணி, இளநிலை பொறியாளர் | 700 | -- | 700 |
| 6. | திரு.சேதுராசன், த/பெ கலியபெருமாள், தட்டச்சர், | -- | -- | -- |
| 7. | திரு.P.பாலச்சந்தர், த/பெ பரந்தாமன், பில் கிளர்க், | 1000 | -- | 1000 |
| 8. | செல்வி.சாலினிதேவி, த/பெ முருகையன், பில் கிளர்க் (Record Clerk) | 1600 | -- | 1600 |
| 9. | அலுவலக இரும்பு லாக்கரில் இருந்த கணக்கில் வராத சந்தேகத்திற்குரிய பணம் | 27250 மற்றும் 1400 | 27250 | 1400 |
| | | | 29760 | |

துணை மேலாளர் (தரக்கட்டுபாடு) கிடங்கு தொகுப்பு அலுவலகத்தினை ஆய்வு குழு அலுவலர் திரு.ஜெகதீசன் மற்றும் விஜிலென்சு குழுவினருடன் மாலை 05.50 மணி முதல் 07.50 மணிவரை சோதனை செய்ததில் அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த அனைத்து அலுவலர்களையும் அங்கேயே அமர வைக்கப்பட்டது. தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர் தேவநேசன் மற்றும் அங்கிருந்த பணியாளர்களிடமும் திடீர் சோதனை குழுவினரை அறிமுகம்

செய்து கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் ஆஜரில் இருந்த தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர் மற்றும் பணியாளர்களையும் அலுவலகத்தையும் தனித்தனியாக சோதனை செய்யப்பட்டதில் கீழ்கண்ட அட்டவணையில் கண்ட விபரம் கண்டறியப்பட்டது. அதன்படி திரு.தேவநேசன், தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.2290/- இருந்தது. அது குறித்து அவரை விசாரிக்க அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் அந்தப்பணம் கையூட்டாக பெற்று வைத்திருந்த பணம் என்று கருதி மகஜரில் கைப்பற்றப்பட்டது. திரு.இளங்கோவன், உதவி பொறியாளர் என்பவரை சோதனை செய்ய ரூ.520/- அவரிடம் இருந்தது, அது அவருடைய சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.பாண்டியன், உதவியாளர், என்பவரை சோதனை செய்ய ரூ.2.200/- அவரிடம் இருந்தது, அது அவருடைய சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.செல்வகணபதி, எடையாளர் என்பவரை சோதனை செய்ய ரூ.5.340/- அவரிடம் இருந்தது, அது குறித்து அவரிடம் விசாரணை செய்ய. அவர் வீட்டிற்கு தேவையான மளிகை பொருட்கள் வாங்குவதற்காக வங்கியில் இருந்து எடுத்து வைத்திருந்ததாகவும் தெரிவித்தார், ஆனால் அதற்கான ஆவணம் எதும் சமர்ப்பிக்காததால். அந்த பணம் கையூட்டாக பெற்று வைத்திருந்த பணம் என்று கருதி மகஜரில் கைப்பற்றப்பட்டது. திரு.கணேஷ்குமார், வாட்சுமேன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.2060/- இருந்தது. அது குறித்து அவரிடம் விசாரணை செய்ய தொகை குறித்து சரியான முகாந்திரம் கூறாததால் அந்த பணம் கையூட்டாக பெற்று வைத்திருந்த பணம் என்று கருதி மகஜரில் கைப்பற்றப்பட்டது. திரு.கதிரவன், தற்காலிக பணியாளர் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.11,200/- ஒரு தொகுப்பாகவும், ரூ.1020/- மற்றொரு தொகுப்பாகவும் இருந்தது. அது குறித்து அவரிடம் விசாரணை செய்ய ரூ.1020/- தனது வீட்டு செலவிற்காக வைத்திருந்த பணம் என்றும், ரூ.11,200/-லோடு மேன்களுக்கு கொடுக்க வைத்திருப்பதாக கூறியதால், தொகை குறித்து சரியான முகாந்திரம் கூறாததால் ரூ.11.200/- கையூட்டாக பெற்று வைத்திருந்த பணம் என்று கருதி மகஜரில் கைப்பற்றப்பட்டது. திரு.சரண்யா, டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர் என்பவரை சோதனை செய்ய ரூ.2000/- இருந்தது. அது அருவடைய சொந்த செலவிற்காக கரூர் வைசியா வங்கியின் ATM மூலம் எடுக்கப்பட்ட பணம் என்று ஆவணத்தை காண்பித்ததால் அந்தபணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.தமிழ்ச்செல்வன், த/பெ தங்கராசு என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.8000/- இருந்தது. அது குறித்து அவரிடம் விசாரணை செய்ய தான் லாரி டிரைவர் என்றும், திடீர் சோதனை குழுவினர் சோதனைக்காக வந்தபோது அலுவலகத்தில் இருந்த திரு.கதிரவன், தற்காலிக பணியாளர் தன்னிடம் கொடுத்து வைத்துக்கொள் என்று கொடுத்த பணத்தை பெற்று வைத்திருந்ததாக தெரிவித்தால் தொகை குறித்து சரியான முகாந்திரம் கூறாததால் அந்த பணம் கையூட்டாக பெற்று வைத்திருந்த பணம் என்று கருதி மகஜரில் கைப்பற்றப்பட்டது. திரு.சுந்தரவடிவேல், த/பெ நரேந்திரன், எடையாளர் என்பவரை சோதனை செய்ய ரூ.500/- அவரிடம் இருந்தது, அது அவருடைய சொந்த பணம் என்று

கூறியதால் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.சங்கர், த/பெ ராமச்சந்திரன், MRM ரைஸ்மில், கணக்குபிள்ளை என்பவரை சோதனை செய்ய ரூ.420/- அவரிடம் இருந்தது. அது அவருடைய சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.சுந்தரமூர்த்தி, த/பெ சுப்பிரமணியன், மாங்குடி என்பவரை சோதனை செய்ய ரூ.4,100/- அவரிடம் இருந்தது. அவரை விசாரிக்க முகம்மது பீவி ரைஸ்மில், விற்குடி கணக்கு பிள்ளையாக இருந்து வருவதாகவும், தங்கள் மில்லிலிருந்து நெல் இறக்குவதற்காக வந்தபோது அலுவலகத்தில் உள்ளவர்களை பார்த்துவிட்டு செல்வதற்காக வந்ததாக தெரிவித்து அவரிடமிருந்து பணம் குறித்து சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் கையூட்டாக கொடுக்க எடுத்து வந்த பணம் என்று கருதி மகஜரில் கைப்பற்றப்பட்டது. திரு.சோமு, த/பெ சண்முகம், புலிவலம் என்பவரை சோதனை செய்ய ரூ.1,900/- அவரிடம் இருந்தது. அவரை விசாரிக்க தான் லாரி டிரைவர் என்றும், அரிசி இறக்குவதற்காக வந்ததாகவும், டீசல் போட வைத்திருந்த பணம் என்று தெரிவித்ததால் அந்த தொகை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.குணசேகரன், த/பெ ராமு அகரதிருநல்லூர் என்பவரை சோதனை செய்ய ரூ.31,800/- அவரிடம் இருந்தது, அது குறித்து அவரிடம் விசாரணை செய்ய, தனது இரண்டு லாரிகள் அரிசி இறக்கிவிட்டு சென்றுவிட்டதாகவும், பணத்துடன் அலுவலகத்தில் இருந்தது குறித்து சரியான விளக்கம் தெரிவிக்காததால் கையூட்டாக கொடுக்க எடுத்து வந்த பணம் என்று கருதி மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் கிடங்கு தொகுப்புதரக்கட்டுப்பாட்டு அலுவலகத்தில் இருந்த மர பிரோவை சோதனை செய்த போது அதில் இருந்த ஆவணங்களின் பின்புறம் ரூ.25,000/- பணம் ரப்பர் பேண்ட் போட்டு சுற்றி வைக்கப்பட்டிருந்தது. அது குறித்து அலுவலகத்தில் இருந்த மேற்படி பணியாளர்கள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு அலுவலகத்தின் பொறுப்பு அலுவலர் திரு.சிவானந்தம் தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர் ஆகியோரிடமும் விசாரணை செய்ததில் யாரும் மேற்படி பணத்திற்கு பொறுபேற்காததால், மேற்படி பணம் கையூட்டாக பெற்று மறைத்து வைக்கப்பட்டிருந்த பணம் என்ற சந்தேகத்தின் பேரில் கைப்பற்றப்பட்டது. மேலும் அவ்வலுவலகத்தில் இருந்த நபர்களிடம் சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்ட தொகை விபரம் கிழ்கண்டவாறு. துணை மேலாளர், தரக்கட்டுப்பாடு (கிடங்கு தொகுப்பு) அலுவலகத்தில் இருந்தவர்களிடம் கைப்பற்றப்பட்ட மற்றும் திரும்ப ஒப்படைக்கப்பட்ட தொகைகள் விபரம்.

| வ. எண். | அலுவலரின் பெயர் மற்றும் பதவி | சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்ட தொகை | கைப்பற்றப்பட்ட தொகை | விசாரணைக்குபின் திருப்பி கொடுக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு.தேவநேசன், த/பெ சின்னையன், | 2490 | 2490 | -- |

| | | | | |
|---|---|---|---|---|
| | தாகூட்டுபாட்டு ஆய்வாளர். | | | |
| 2. | திரு.இளங்கோவன், த/பெ தாதன், உதவி பொறியாளர், | 520 | -- | 520 |
| 3. | திரு.பாண்டியன், த/பெ வீராச்சாமி, உதவியாளர், | 2200 | -- | 2200 |
| 4. | திரு.செல்வகணபதி, த/பெ சுந்தரமூர்த்தி, எடையாளர், | 5340 | 5340 | -- |
| 5. | கணேஷ்குமார், த/பெ ரெங்கசாமி, வாட்சுமேன் | 2060 | 2060 | -- |
| 6. | திரு.கதிரவன், த/பெ ரவி, தற்காலிக பணியாளர், | 11200+1020 | 11200 | 1020 |
| 7. | திரு.அருண்தாஸ், த/பெ பன்னீர்செல்வம், தற்காலிக பணியாளர், | -- | -- | -- |
| 8. | திரு.சரண்யா, த/பெ பாலமுருகன், டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர், | 2000 | -- | 2000 |
| 9. | திரு.தமிழ்ச்செல்வன், த/பெ தங்கராசு, நன்னிலம், திருவாரூர். | 8000 | 8000 | -- |
| 10. | திரு.சுந்தரவேல், த/பெ நரேந்திரன், விற்குடி | 500 | -- | 500 |
| 11. | திரு.சங்கர், த/பெ ராமச்சந்திரன், MRM Rice Mill | 420 | -- | 420 |
| 12. | திரு.சுந்தரமூர்த்தி, த/பெ சுப்பிரமணியன், மாங்குடி | 4100 | 4100 | -- |
| 13. | திரு.சோமு, த/பெ சண்முகம், லாரி டிரைவர், புலிவலம் | 1900 | -- | 1900 |
| 14. | திரு.குணசேகரன், த/பெ ராமு, அகரதிருநல்லூர், | 31800 | 31800 | -- |
| 15. | அலுவலகத்தில் இருந்த மா | 25000 | 25000 | -- |

| | | | | |
|---|---|---|---|---|
| | பீரோவில் அலுவலர்கள் யாரும் பொறுப்பேற்காத கணக்கில் வராத தொகை | | 89990 | |

திருவாரூர் வட்டக்கிடங்கு அலுவலகத்தினை ஆய்வு குழு அலுவலர் திரு.ஜெகதீசன் மற்றும் விஜிலென்சு குழுவினருடன் மாலை 08.00 மணி முதல் 10.00 மணிவரை சோதனை செய்ததில் அலுவலகத்திற்கு சென்றபோது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் தரக்கட்டுப்பாட்டு அலுவலக மேலாளர் திரு.பாஸ்கரன் மற்றும் அவரது உதவியாளர் திரு.ரவி ஆகியோர் மேற்படி அலவலகத்தை ஆய்வு செய்து கொண்டிருந்தனர். அவர்களையும். அங்கு பணியில் இருந்த அனைத்து அலுவலர்களையும் அங்கேயே அமர வைக்கப்பட்டது. அவர்களிடம் திடீர் சோதனை குழுவினரை அறிமுகம் செய்து கொள்ளப்பட்டது. அப்போது அங்கிருந்த கிரே கலர் சட்டை மற்றும் வெள்ளை நிற பேண்ட் அணிந்திருந்த நபர் அங்கிருந்து நழுவி சென்றார். அவரை நிற்குமாறு அறிவுறுத்தியும் நிற்காமல் சென்று விட்டார். பின்னர் மேற்படி அலுவலகத்தில் ஆஜரில் இருந்த பணியாளர்களையும் அலுவலகத்தையும் தனித்தனியாக சோதனை செய்யப்பட்டதில் திரு.ரவி. உதவி தரக்கட்டுப்பாட்டு அலுவலர் என்பவரை சோதனை செய்ய ரூ.90/- அவரிடம் இருந்தது. அவரை விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால் அந்த தொகை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.பாஸ்கரன். மேலாளர். தரக்கட்டுப்பாட்டு அலுவலகம் என்பவரை சோதனை செய்ய ரூ.2280/- அவரிடம் இருந்தது. அவரை விசாரிக்க அது தனது மருத்துவ செலவிற்காக வைத்திருந்ததாகவும். அந்த தொகை வைத்திருந்ததற்கான சரியான ஆவணங்கள் எதும் ஆஜர்படுத்தாததால் அந்த தொகை கையூட்டு பெற்று வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் பேரில் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திரு.S.ரவி. இளநிலை உதவியாளர். என்பவரை சோதனை செய்ய ரூ.70/- அவரிடம் இருந்தது. அவரை விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால் அந்த தொகை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.விஸ்வநாதன், பில்கிளர்க். என்பவரை சோதனை செய்ய ரூ.2500/- அவரிடம் இருந்தது. அவரை விசாரிக்க 15.03.2023 தனது ATM-ல் ரூ.8000/- பணம் செவிற்காக எடுத்ததாகவும். அதில் செலவு போக மீதம் ரூ.2.500/-வைத்திருந்ததாக தெரிவித்ததால் அந்த தொகை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.சுப்பிரமணியன். இளநிலை உதவியாளர் என்பவரை சோதனை செய்ய ரூ.2700/- அவரிடம் இருந்தது. அவரை விசாரிக்க மேற்படி தொகை குறித்து சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த தொகை கையூட்டு பெற்று வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் பேரில் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திரு.சண்முகம். இளநிலை உதவியாளர் என்பவரை சோதனை செய்ய ரூ.50/- அவரிடம் இருந்தது. அவரை விசாரிக்க சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்ததால். அந்த தொகை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.நீலமேகம், எடையாளர் என்பவரை சோதனை செய்ய ரூ.2986/- அவரிடம் இருந்தது. அவரை விசாரிக்க தனது சொந்த செலவிற்காக

15.03.2023 அன்று ரூ.3000/- ATM-ல் இருந்து எடுத்த பணம் என்று ரசீது காண்பித்ததால் அந்த தொகை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.பாலசுப்பிரமணியன், தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர் என்பவரை சோதனை செய்ய ரூ.9866/- அவரிடம் இருந்தது. அவரை விசாரிக்க மேற்படி தொகை குறித்து சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த தொகை கையூட்டு பெற்று வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் பேரில் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திரு.சித்தார்தன், உதவி தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர் என்பவரை சோதனை செய்ய ரூ.690/- அவரிடம் இருந்தது. அவரை விசாரிக்க தனது சொந்த செலவிற்காக வீட்டிலிருந்து எடுத்து வந்த பணம் என்று தெரிவித்ததால். அந்த தொகை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.துரை, உதவி மேலாளர், தரக்கட்டுப்பாட்டு அலுவலகம் என்பவரை சோதனை செய்ய ரூ.460/- அவரிடம் இருந்தது. அவரை விசாரிக்க தனது சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவர் அமர்ந்திருந்த மேஜையை சோதனை செகய்தபோது இரண்டு 500 ரூபாய் நோட்டுகளாக ரூ.1000/- இருந்தது. அது குறித்து அவரை விசாரிக்க அதுபற்றி தனக்கு தெரியாது என்று கூறியதால். ஏற்கனவே கையூட்டு பெற்று வைத்திருந்த ரூ.1000/- சோதனை குழுவினரை பார்த்தவுடன் மேஜை டிராயரில் போட்டுள்ளார் என்ற சந்தேகத்தின் பேரில் மேற்படி தொகை மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்தில் இருந்த கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை. உதவியாளரின் டேபிளின் கீழ் டிராயரை சோதனை செய்தபோது ரூ.9,000/- இருந்தது. அதுகுறித்து அலுவலகத்தில் இருந்த அனைவரிடமும் விசாரிக்க பணம் குறித்து யாரும் விளக்கம் தெரிவிக்கவில்லை. எனவே தாலுக்கா கிடங்கு உதவி தரக்கட்டுப்பாட்டு அலுவலர் ரவி என்பவரிடம் இருக்கை குறித்து விசாரிக்க திரு.வேதரத்தினம், பொது விநியோக திட்ட உதவியாளரின் இருக்கை என்றும், மதிய உணவிற்கு சென்றவர் இன்று வரவில்லை என்று தெரிவித்ததால், போன் மூலம் தகவல் தெரிவித்து அலுவலகத்திற்கு வரவழைத்து விசாரிக்க மேற்கண்ட தொகை தன்னுடைய தொகை என்று தெரிவிக்காததால் யாரோ கையூட்டு பெற்று சோதனை குழுவினரை பார்த்தவுடன் மறைப்பதற்காக அங்கு வைத்திருக்கலாம் என்று கருதி அந்தபணம் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.குருமூர்த்தி, வாட்சுமேன், திருமதி.சரஸ்வதி எடையாளர், திருமதி.ராஜலெட்சுமி, துப்புரவு பணியாளர், திரு.சிவானந்தம், தரக்கட்டுப்பாட்ட ஆய்வாளர் ஆகியோரை சோதனை செய்ய தொகை ஏதும் கைப்பற்றப்படவில்லை. திருவாரூர் வட்டக்கிடங்கு அலுவலகத்தில் இருந்தவர்களிடம் கைப்பற்றப்பட்ட மற்றும் திரும்ப ஒப்படைக்கப்பட்ட தொகைகள் விபரம்.

| வ. எண். | அலுவலரின் பெயர் மற்றும் பதவி | சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்ட தொகை | கைப்பற்றப் பட்ட தொகை | விசாரணைக்குபின் திருப்பி கொடுக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு.ரவி, த/பெ கைலாசம், உதவி தரக்கட்டுப்பாட்டு | 90 | -- | 90 |

| | | | | |
|---|---|---|---|---|
| | அலுவலர், | | | |
| 2. | திரு.பாஸ்கரன், த/பெ பக்தன், மேலாளர், | 2280 | 2280 | -- |
| 3. | திரு.S.ரவி, த/பெ சிவராமன், இளநிலை உதவியாளர், | 70 | -- | 70 |
| 4. | திரு.விஸ்வநாதன், த/பெ சுப்பிரமணியன், பில் கிளர்க், | 2500 | -- | 2500 |
| 5. | திரு.சுப்பிரமணியன், த/பெ ராமசாமி, இளநிலை உதவியாளர், | 2700 | 2700 | -- |
| 6. | திரு.குருமூர்த்தி, த/பெ ராமமூர்த்தி, வாட்சுமேன், | -- | -- | -- |
| 7. | திருமதி.சரஸ்வதி, த/பெ பாண்டியராஜன், எடையாளர், | -- | -- | -- |
| 8. | திருமதி.ராஜலெட்சுமி, த/பெ சக்திவேல், துப்புரவு பணியாளர், | -- | -- | -- |
| 9. | திரு.சண்முகம், த/பெ ஜெயராமன், இளநிலை உதவியாளர், | 50 | -- | 50 |
| 10. | திரு.நீலமேகம், த/பெ அருந்தையன், எடையாளர், | 2986 | -- | 2986 |
| 11. | திரு.சிவானந்தம், த/பெ சண்முகம், தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர், கிடங்கு தொகுப்பு, தரக்கட்டுபாடு | -- | -- | -- |
| 12. | பாலசுப்பிரமணியன், த/பெ பழனியாண்டி, தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர், | 9866 | 9866 | -- |
| 13. | திரு.சித்தார்த்தன், த/பெ அம்பிகாபதி, உதவி தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர், | 690 | -- | 690 |
| 14. | திரு.துரை, த/பெ | 460+1000 | 1000 | 460 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொன்னுசாமி, உதவி மேலாளர், தரக்கட்டுபாடு, மண்டல மேலாளர் அலுவலகம், திருவாரூர் | | | |
| 15. | கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை உதவியாளர் டேபிளின் கீழ் டிராயரில் இருந்து எடுக்கப்பட்ட கணக்கில் வராத தொகை | 9000 | 9000 | -- |
| | | | 24846 | |

மூலங்குடி/கூத்தாநல்லூர் சரக வட்டக்கிடங்கு அலுவலகத்தினை ஆய்வு குழு அலுவலர் திரு.திவாகர் மற்றும் விஜிலென்சு குழுவினருடன் மாலை 03.45 மணி முதல் 05.45 மணிவரை சோதனை செய்ததில் வட்ட கிடங்கு, அலுவலகத்திற்கு சென்றபோது திருவாரூர் அலுவலகத்திலிருந்து கிரே கலர் சட்டை மற்றும் வெள்ளை நிற பேன்ட் அணிந்திருந்த நபர் அங்கு காணப்பட்டார். அவரை சோதனை குழு அலுவலர் திரு.ஜெகதீசன் அவர்கள் மேற்படி திருவாரூர் வட்ட கிடங்கு அலுவலகத்திலிருந்து நழுவி நிற்காமல் வந்த நபர் இவர்தான் என்று அடையாளம் காட்டினார். அவரை விசாரிக்க தான் மூலங்குடி வட்ட கிடங்கு அலுவலகத்தின் தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர் திரு.சிவக்குமார் என்று தெரிவித்தார். அவரிடமும், அங்கிருந்த பணியாளர்கள் மற்றும் தனியார் நபர்களிடம் திடீர் சோதனை குழுவினரை அறிமுகம் செய்து கொள்ளப்பட்டு அங்கிருந்த நபர்கள் அங்கேயே அமர வைக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் ஆஜரில் இருந்த பணியாளர்களையும் அலுவலகத்தையும் தனிநபர்களையும் தனித்தனியாக சோதனை செய்யப்பட்டதில் திரு.சிவக்குமார், இளநிலை தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர் என்பவரை சோதனை செய்ய ரூ.410/- இருந்தது. அது அவருடைய சொந்தபணம் என்று தெரிவித்ததால், அது அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.பரணிதரன், TCCWS, என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.1080/- இருந்தது. மேலும் அந்த குடோன் வாசலில் நின்றிருந்த பரணிதரனின் TN 50 AD 1380 CT-100 Bajaj இருசக்கரவாகனத்தை சோதனை செய்ய டேங் கவரில் ரூ.4.000/- இருந்தது. மேற்கண்ட தொகைகள் குறித்து அவரிடம் விசாரிக்க சரியான விளக்கம் கூறாமல் வாகனம் தன்னுடையது என்றும் ஆனால் அதிலிருந்த பணம் குறித்து தனக்கு தெரியாது என்றும் தெரிவித்ததாலும், மேற்கண்ட தொகைகள் குறித்து சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் ரூ.5080/- தொகை வழக்கிற்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. செல்வி.துர்கா, டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர் (தற்காலிக பணியாளர்) என்பவரை சோதனை செய்ய ரூ.2,300/- இருந்தது. அது குறித்து விசாரிக்க தான் Fasion Technology படித்து வருவதாகவும் அதற்கு பீஸ் கட்டுவதற்காக வைத்திருந்த தொகை என்று தெரிவித்ததால், அந்த தொகை அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. திரு.அய்யப்பன், கணக்குபிள்ளை,

SM&Sons, என்பவரை சோதனை செய்ய ரூ.4,140/- இருந்தது. அதுகுறித்து விசாரிக்க தொகை குறித்து முன்னுக்குபின் முரணாக தெரிவித்து சரியான விளக்கம் அளிக்காததால், கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி அந்த தொகை மகஜரில் கைப்பற்றப்பட்டது. திரு.கல்யாணசுந்தரம், கணக்குபிள்ளை SVT Rice Mill என்பவரை சோதனை செய்ய அவரிடம் பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. கூத்தாநல்லூர் தாலுக்கா @ மூலங்குடி சரக வட்டக்கிடங்கு அலுவலகத்தில் இருந்தவர்களிடம் கைப்பற்றப்பட்ட மற்றும் திரும்ப ஒப்படைக்கப்பட்ட தொகைகள் விபரம்.

| வ. எண். | அலுவலரின் பெயர் மற்றும் பதவி | சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்ட தொகை | கைப்பற்றப்பட்ட தொகை | விசாரணைக்குபின் திருப்பி கொடுக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு.சிவக்குமார், வேளையன், இளநிலை தரகட்டுப்பாட்டு ஆய்வாளர், | 410 | -- | 410 |
| 2. | திரு.பரணிதரன், த/பெ சதாசிவம், TCCWS (தமிழ்நாடு கூட்டுறவு பண்டகசாலை), | 1080+4000 | 5080 | -- |
| 3. | செல்வி.துர்கா, த/பெ ராஜ், டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர், தற்காலிகம், | 2300 | -- | 2300 |
| 4. | திரு.அய்யப்பன், த/பெ கோவிந்தசாமி, கணக்குபிள்ளை, SM & Sons, மாடர்ன் ரைஸ் மில், | 4140 | 4140 | -- |
| 5. | திரு.கல்யாணசுந்தரம், த/பெ சௌரிராஜன், கணக்குபிள்ளை, SVT Rice Mill, | -- | -- | -- |
| | | | 9220 | |

சாக்கு குடோன் அலுவலகத்தினை ஆய்வு குழு அலுவலர் திரு.திவாகர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் மாலை 06.00 மணி முதல் 08.00 மணிவரை சோதனை செய்ததில் அலுவலகத்தில் இருந்த திரு.மதியழகன், த/பெ அய்யாறு என்பவரிடம் சோதனை குழுவினரை அறிமுகம் செய்து கொண்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி மதியழகனையும் சாக்கு குடோனையும் சோதனை செய்ய பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. மேற்படி துணை மேலாளர், கொள்முதல் மற்றும் இயக்ககம் அலுவலகத்தில் கண்டறியப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.29,760/-ம், துணை மேலாளர், தரக்கட்டுப்பாடு, கிடங்கு தொகுப்பு அலவலகத்திலிருந்து கண்டறியப்பட்ட ரூ.89,990/-ம், திருவாரூர் வட்டக்கிடங்கு

அலுவலகத்திலிருந்து கண்டறியப்பட்ட ரூ.24,846/-ம் மற்றும் முலங்குடி வட்டக்கிடங்கு அலுவலகத்திலிருந்து கண்டறியப்பட்ட ரூ.9.220/-ம் ஆக மொத்தம் கூடுதல் ரூ.1.53.816/- கைப்பற்றப்பட்டது. மேலும் ஆவணங்கள் 1) TNCSC கேட் பாஸ்புக் - புத்தக எண்.106. (005251 -005300), 2) TNCSC PO Puschase and Payment Register From 12.01.2023, 3) TNCSC Sample Analysis Register from 12.02.2023, 4) TNCSC Attendance Register – தரக்கட்டுப்பாட்டு, துணை மேலாளர் அலுவலகம், 5) TNCSC Sample Pre – Analysis and Bulking Register 6) கிடங்கு தொகுப்பு லாரி அனுமதி பதிவேடு ஆகியவற்றை தரக்கட்டுப்பாட்டு அலுவலர் திரு.சிவானந்தம் என்பவரிடமிருந்தும். 7) TNCSC- Attendance Register – Unit Office கொள்முதல் மற்றும் இயக்ககம் 8) படை வீரர் கொடிநாள் 2022 நிதி ரசீது (21 தொகுப்பு) கண்காணிப்பாளர் திரு.ரமேஷ் அவர்களிடமிருந்தும் 9) திருவாரூர் வட்டக்கிடங்கு Attendance Register, 10) திருவாரூர் வட்டக்கிடங்கு கேட் பாஸ்புக் - புத்தக எண்.449, (020901 -020950), 11) திருவாரூர் வட்டக்கிடங்கு - Sample Pre – Analysis and Bulking Register, 12) Stack Card Register ஆகியவற்றை உதவி தர ஆய்வாளர் திரு.ரவி என்பவரிடமிருந்தும். 13) முலங்குடி வட்டக்கிடங்கு Attendance Register, 14) முலங்குடி வட்டக்கிடங்கு - Sample Pre - Analysis and Bulking Register ஆகியவற்றை தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர் திரு.சிவக்குமார் என்பவரிடமிருந்தும், 15) சாக்கு குடோன் கேட் பாஸ்புக் - புத்தக எண்.79. (003901 - 003950), 16) உள் மண்டல அனுப்புகை படிவ புத்தகம், 17) Issu Memo Book No.169 (008401 – 008450), 18) Stock Issu Register No.12 (000551 – 000600), 19) Stack Card Register, 20) குடோன் Godown Stock Reister ஆகியவற்றை மதியழகன் என்பவரிடமிருந்தும் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனை இன்று 16.03.2023-ந் தேதி 00.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

இதன் முதல் தகவல் அறிக்கை மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளரின் புகார்மனு. திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்களுக்கு அனுப்பியும் இதன் நகல்கள் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல்கள் நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/2023 U/s 102 Cr.P.C and 7,7A, 8 r/w 12 of PC Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை காலம்-7ன் தொடர்ச்சி.

A1. திரு.பெரியசாமி, த/பெ முத்து, உதவியாளர், துணை மேலாளர் அலுவலகம், கொள்முதல் மற்றும் இயக்கம், தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர்.

A2. திரு.தேவநேசன், த/பெ சின்னையன், தரகட்டுப்பாட்டு ஆய்வாளர், துணை மேலாளர்-தரகட்டுப்பாடு அலுவலகம், கிடங்குதொகுப்பு, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர்.

A3. திரு.செல்வகணபதி, த/பெ சுந்தரமூர்த்தி, எடையாளர், துணை மேலாளர்-தரகட்டுப்பாடு அலுவலகம், கிடங்குதொகுப்பு, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர்.

A4. திரு.கணேஷ்குமார், த/பெ ரெங்கசாமி, வாட்சு மேன், துணை மேலாளர்-தரகட்டுப்பாடு அலுவலகம், கிடங்குதொகுப்பு, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர்.

A5. திரு.கதிரவன், த/பெ ரவி, தற்காலிக பணியாளர், துணை மேலாளர்- தரகட்டுப்பாடு அலுவலகம், கிடங்குதொகுப்பு, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர்.

A6. திரு.பாஸ்கரன், த/பெ பக்தன், மேலாளர், தரகட்டுப்பாடு, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், விளமல், திருவாரூர்.

A7. திரு.சுப்பிரமணியன், த/பெ ராமசாமி, இளநிலை உதவியாளர், திருவாரூர் தாலுக்கா கிடங்கு, தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிப கழகம், திருவாரூர்.

A8. பாலசுப்பிரமணியன், த/பெ பழனியாண்டி, தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர், குடவாசல் மற்றும் கிடாரங்கொண்டான், திருவாரூர்.

A9. திரு.துரை, த/பெ பொன்னுசாமி, உதவி மேலாளர், தரக்கட்டுபாடு, மண்டல மேலாளர் அலுவலகம், திருவாரூர்.

A10. திரு.பரணிதரன், த/பெ சதாசிவம், TCCWS (தமிழ்நாடு கூட்டுறவு பண்டகசாலை), காகிதகாரதெரு, திருவாரூர்.

A11. திரு.தமிழ்ச்செல்வன், த/பெ தங்கராசு, காளியம்மன் கோயில் தெரு, பூந்தோட்டம், நன்னிலம், திருவாரூர். (தனி நபர்)

A12. திரு.சுந்தரமூர்த்தி, த/பெ சுப்பிரமணியன், 246 தென்கரை, கீழமணலி, மாங்குடி, திருவாரூர். (தனி நபர்)

A13. திரு.குணசேகரன், த/பெ ராமு, 1/28, மாரியம்மன் கோயில் தெரு, அகரதிருநல்லூர், காட்டூர், திருவாரூர். (தனி நபர்)

A14 திரு.அய்யப்பன், த/பெ கோவிந்தசாமி, கணக்குபிள்ளை, SM & Sons, மாடர்ன் ரைஸ் மில், வண்டாம்பாளை, திருவாரூர். (தனி நபர்)

(signature) 18/3/23

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு கண்காணிப்புப் பிரிவு
திருவாரூர்.